# மெட்ரோவில் சைக்கிள் எடுத்து செல்லலாம்

**சென்னை, பிப். 17–**
மெட்ரோ ரயிலில், பயணியர் மிதிவண்டி எடுத்து செல்லலாம் என, நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சென்னையில், விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. இந்த ரயிலில் பயணியர் வருகையை அதிகரிக்க, நிர்வாகத்தின் சார்பில், பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தில், சிறிய வகை ஸ்மார்ட் சைக்கிளை ரயிலில், பயணியர் எடுத்து செல்ல, நேற்று முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் முதல் முறையாக, சென்னை மெட்ரோ ரயிலில், இவ்வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.